**எச்.எம்.ஓ.பி. எண்: 03/2025**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 09th day of January 2026

ம.சா.1. மதிவாணன், த/பெ. சீனுவாசன்,

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மத்திய ரிசர்வ் போலீசில் கான்ஸ்டபிளாக விசாகப்பட்டினத்தில் வேலை பார்க்கிறேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 21.08.2016 ம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்கண்ட திருமணமானது எனது சம்மதத்துடன் எனது குடும்பத்தார் ஒப்புதலின் பேரில் தான் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் முடிந்தவுடன் நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான். திருமணம் ஆன புதிதில் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த சண்டை சச்சரவும் கிடையாது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எனக்கு மனஉளைச்சல் கொடுத்தது சம்மந்தமாக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் 02.03.2022 ம் தேதி எங்கள் வீட்டை விட்டு வெளியேறி தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அவருடைய அம்மா வீட்டிற்கு சென்ற பின்னர் திரும்பி வருவதற்கு அவருக்கு எழுத்து பூர்வமாக கடிதம் ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரரை மீண்டும் என்னுடன் வாழ வேண்டும் என சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எவ்வித காரணமும் இன்றி என்னுடன் வாழ வர மறுக்கிறார் என நிரூபிப்பதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வேலை சம்மந்தமாக 3 வருடத்திற்கு ஒரு முறை எனக்கு இடமாறுதல் இருக்கும். அதனால் எதிர்மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்றால் இல்லை. எதிர்மனுதாரரை எனது அம்மாவுடன் வீட்டில் விட்டுவிட்டு நான் வேலை நிமிர்த்தமாக செல்வது உண்டு. எதிர்மனுதாரர் மருத்துவ சிகிச்சை சம்மந்தமாக எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு உள்ளது. எதிர்மனுதாரர் குழந்தை பெற்றுக்கொள்வதற்காக சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். மருத்துவ சிசிச்சை செய்து கொண்டதில் எங்களுக்கு குழந்தை பிறக்காததற்கு எதிர்மனுதாரரிடம் தான் குறை உள்ளது என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட குறையை மருத்துவ ரீதியாக சரிசெய்து குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது. எதிர்மனுதாரர் மருந்து மாத்திரைகளை உட்கொள்ளவில்லை என்பதற்கு சாட்சியம் ஏதேனும் உள்ளதா என்றால் நான் மருந்து எடுத்துக்கொள்ளுமாறு அவரிடம் தெரிவித்தேன். எதிர்மனுதாரரிடம் நான் குறிப்பிட்டுள்ள குறைப்பாடுகள் யூகத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் மருத்துவ செலவிற்கு ரூ.5,00,000/–

செலவு செய்ததற்கு மருத்துவ பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் இருந்த மருத்துவ சிகிச்சை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் தாக்கல் செய்துள்ளேன். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ அவரது பெற்றோர்களுடன் பேசினேன். அவ்வாறு சேர்ந்து வாழ்வதற்கு நீதிமன்றத்தில் மனு செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எனக்கு தான் விருப்பம் இல்லை என்றால் சரிதான். இந்த விவாகரத்து மனு தாக்கல் செய்வதற்கு முன்னர் எந்த சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மீது ஒரு அழுத்தம் கொடுப்பதற்காகவே பொய்யாக இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுவில் எதிர்மனுதாரர் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு எழுத்து பூர்வமான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் செயலால் சக ஊழியர்களிடம் கேளிக்கு ஆளானேன் என்பதில் நிரூபிப்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை என்றால் நான் அதனால் மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். நான் மனஉளைச்சலுக்கு ஆளானதால் வேலையில் கவனம் இன்மை காரணமாக மேல் அதிகாரியிடம் கண்டிப்புக்கு ஆனேனா என்றால் இல்லை. வேலையில் எனது மனஉளைச்சலை காட்டுவதில்லை. உண்மையில் எதிர்மனுதாரர் எனக்கு எதிராக எந்த கொடுமையும் செய்தது இல்லை என்றும் அவர் தற்போதும் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றும் அதனால் நான் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனு நிலைநிற்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தந்தை இறந்த துக்க நிகழ்வில் நானும் எனது பெற்றோரும் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் சித்தப்பா சொல்லி நானும் எனது பெற்றோரும் சென்றோம். நாங்கள் செய்ய வேண்டிய செய்முறைகள் அனைத்தையும் சரியாக செய்தோம் என்றால் சரிதான். நான் எனது வழக்கில் பொய்யான விஷயங்களை கூறி தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்

Sd/- S. Senthilbabu,

சாட்சியின் கையொப்பம்

சார்பு நீதிபதி,
போளூர்.